REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	ரூ. 6
ஆறு மாதம்	ரூ. 12
ஒரு வருடம்	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 17உ திங்கள் (29—4—57) ★ ★ வெளியீடு: சித்திரை 18உ செவ்வாய் (30—4—57) இதழ் [275

ரசம்போன கண்ணாடியில் முகம் பார்த்தால்!

அவலட்சணம்போலத்தானே தெரியும்

ஜனநாயகப் பண்பு குறித்து அண்ணா விளக்கம்

"இங்கு எங்களைப் பாராட்டிப் பேசிய பேராசிரியர் அவர்கள், நாட்டில் எதிர்க் கட்சி எப்படி எப்படிப் பணியாற்ற வேண்டும் என்று எடுத்துரைத்தபோது, நான் பரிதாபப்பட்டேன். காரணம், அவர் விரும்புகிறபடி ஒரு எதிர்க் கட்சி பணியாற்றும் ஜனநாயக சூழ்நிலை நாட்டில் இல்லை என்பதை, அந்தப் பேராசிரியர் அவர்கள் கவனத்தில் கொள்ள முடியவில்லை என்பதால் தான் பரிதாபப்பட்டேன்.

"அவரைப் போன்ற பேராசிரியர்கள், சந்தர்ப்பம் வாய்க்கும் போது, ஆட்சியாளர்களுக்கு, 'எதிர்க் கட்சியை எப்படி நடத்த வேண்டும்' என்பது குறித்து, தங்களுக்கே உரிய திறமையினால், சூசகமாகவேனும் தெரிவிப்பார்களேயானால், அது நல்லது.

"ஒரு நடிகர், நாடகம் ஒன்றில் எத்தனைதான் வீரமாகப் பேசி உணர்ச்சிகள் பொங்க நடித்தாலும், உடன் உள்ள துணை நடிகர் மரக்கட்டைபோல நின்றிருந்தால், அந்தப் பிரதான நடிகரின் நடிப்பு சோபிக்காது.

"அதுபோலவே, எதிர்க் கட்சியினர் எத்தனைதான் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தாலும், ஆட்சியாளர், மரக்கட்டை போல் நிற்கும் துணைநடிகரைப்போல இருந்தால் என்ன பயன்?

"எதிர்க் கட்சி என்பது 'ரசம்' பூசப்பட்ட கண்ணாடி ஒன்றில் அழகி ஒருத்தி முகம் பார்ப்பது போன்றது.

"ஆளும் கட்சியினர், 'ரசம்' பூசப்பட்ட கண்ணாடி போன்றவர்கள்; அதில் முகம் பார்க்கும் அழகி போன்றவர்கள், எதிர்க் கட்சியினர்!

"கண்ணாடியில் உள்ள 'ரச'த்தைப் பொறுத்துத்தான் பார்ப்பவரின் முகம் தெரியும்!

"இன்றைய ஆட்சியாளர்களோ, 'ரசம்'போன கண்ணாடிகளாயிருக்கின்றனர், 'உடைந்துபோன கண்ணாடி' என்று கூறாமல், 'ரசம்போன கண்ணாடி' என்று கூறுவதற்கு, காரணம் உண்டு; கண்ணாடியில் 'ரசம்' போய்விட்டால் மீண்டும் பூசிக்கொள்ளலாம்; உடைந்தால் முடியாது. ஆட்சியாளர்கள் இன்று, எதிர்க்கட்சியினரை மதிக்கும் பண்பில்லாதவர்களாயிருப்பினும், இனியேனும் அந்தப் பண்பைப் பெறலாம்; அதனால்தான், 'ரசம் போன கண்ணாடி' என்றேன். 'ரசம்' உள்ள கண்ணாடியில்தான் முகம்பார்க்க முடியும்.

"அதுபோலவே, ஆட்சியாளரைப் பொறுத்துத்தான் எதிர்க்கட்சியினர் பணியாற்ற முடியும்.

"ஆட்சியாளர்கள் கண்ணாடியில் முகம்பார்க்க விரும்பும் எங்களை, 'அவலட்சணமானவர்கள்' என்று கருதாமலிருக்க வேண்டும்; அப்போதுதான், சனநாயகம் பிழைக்க முடியும்.

"இங்கு பாராட்டிப் பேசிய பேராசிரியர் போன்றவர்கள், சட்டசபையில் நாங்கள் கல்வித்துறை பற்றியும், கல்வி வளர்ச்சி பற்றியும், என்ன கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டுமென்பதை, எங்களுக்கு அவ்வப்போது எடுத்துரைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இதுபோல கருத்துக்களைத் தருவதுதான், நாங்கள் திறம்படப் பணியாற்றத் துணைபுரிவதாகும்,"

என்று, அண்ணா அவர்கள், தியாகராயர் கலைமன்றத்தார் வழங்கிய பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வடசென்னை மக்களுக்குக் கலை ஆர்வத்தை ஊட்டவும், வளர்க்கவுமாக நண்பர்கள் அமைத்துள்ள தியாகராயர் கலைமன்றத்தார், இங்கே எங்களை அழைத்துப் பாராட்டுகின்றனர்; இதற்கு நான் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல மனம் படைத்தோர்

"நல்ல மனம் படைத்தவர்கள், நல்ல உள்ளத்தோடு தருகிற வரவேற்பு என்ற முறையில், நாங்கள் இந்தப் பாராட்டினைப் பெருமையோடும் பூரிப்போடும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

காரண ஆராய்ச்சி

"இங்கு பாராட்டிப் பேசியவர்கள் எல்லாம், எங்களைப் பாராட்டுவதற்கான காரணங்களை ஆராய்ந்தார்கள்.

"நாங்கள் கலை உலகத் தொடர்பு கொண்டவர்கள் என்றனர் சிலர்; 'நாங்கள் இந்தக் கல்லூரியோடு தொடர்பு கொண்டவர்கள்—அதனால்தான் பாராட்டு' என்றனர் சிலர்.

"இப்படி இவர்கள் எங்களைப் பாராட்டும்போது, பாராட்டுவதற்கான காரணங்களை ஆராய்வதற்குக் காரணம், 'இவர்களை என் இங்கே அழைத்துப் பாராட்டுகிறார்கள்?' என்று சிலர் கேட்கக் கூடும் என்பதுதான்!

மனஅரிப்பு

"அப்படிக் கேட்கக் கூடியவர்களின் ஐயப்பாட்டினைப் போக்கத்தான், இந்தக் காரண விளக்கங்கள் எல்லாம்!

"'இவர்களுக்கு இங்கே என் பாராட்டு?' என்று கேட்கக் கூடியவர்கள் நாட்டில் இருக்கத்தான் செய்கின்றனர். அப்படிக் கேட்கிற அளவுக்கு மனஅரிப்புக் கொண்டவர்கள் அவர்கள்!

"இரண்டு பேர் சந்தித்தாலே, இந்த நாட்டில், 'ஏன் சந்தித்தார்கள்? என்ன சதி செய்ய சந்தித்

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. சட்டசபை உறுப்பினர்கள்

பதவியேற்க 'அறிவக'த்திலிருந்து புறப்பட்ட காட்சி

சென்னை, ஏப். 29—

நாட்டு மக்களின் எதிர்கால நல்வாழ்விற்குப் பணியாற்றுவதற்காக சட்டமன்றம் செல்லும் தி. மு. கழக சட்டசபை உறுப்பினர்கள் இன்று காலை 10 மணி அளவில், 'அறிவக'த்திலிருந்து புறப்பட்டனர்.

கழக வரலாற்றில் முதன் முறையாகச் சட்டமன்றப் பணியாற்றச் செல்லும் பொறுப்புணர்வின் 'சாயல்', மன்ற உறுப்பினர்களின் முகப் பொலிவில் தெள்ளத் தெளிவாகப் பிரதிபலித்தது.

காலையில், அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் உடனிருந்து வழியனுப்ப, அண்ணா அவர்களும் அவரைத் தொடர்ந்து மற்ற உறுப்பினர்களும் சட்டமன்றம் நோக்கிப் புறப்பட்டனர்.

'அறிவக'த்தில் கூடியிருந்த ஏராளமான தோழர்கள் வாழ்த்துக் கூறினர்.

கூடியிருந்த அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

சென்னை சட்டசபைத் தலைவர் பதவிக்கு டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்களும், துணைத் தலைவர் பதவிக்கு பி. பக்தவத்சலம் அவர்களும்காங்கிரஸ் அபேட்சகர்களாக தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

சென்னை சட்டமன்றத்தில் நாம்!

வரலாற்றுச் சிறப்புக்குரிய மகத்தான வைபவம்

அண்ணா உள்ளிட்ட கழகத் தோழர்கள் உறுதிமொழி ஏற்ற காட்சி

ஆயிரக்கணக்கான மக்கள் கூடிநின்று வாழ்த்தொலி முழக்கிய மாட்சி

சென்னை, ஏப். 29—

இன்று அண்ணா அவர்களும், மற்ற தோழர்களும், சட்டசபை கூடுமிடமாகிய கோட்டைக்குச் செல்லுகையில், கோட்டையின் உள்ளும் வெளியிலும் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்த்தொலி முழங்கினர்.

அவைத் தலைவரின் அறிவிப்புக்குப் பிறகு அமைச்சர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

அடுத்து, கா. சீ. க. தலைவர் வி. கே. இராமசாமி, தி. மு. கழகத் தலைவர் அண்ணா, கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம், மற்ற கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

தி. மு. க. சட்டசபைக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தமிழிலேயே 'கடமையைச் சரிவரச் செய்வேனென்று மனப்பூர்வமாகக் கூறி' உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

வட எல்லைப் போராட்டக் கமிட்டித் தலைவரும் தேர்தலின் போது காங்கிரசில் சேர்ந்தவருமான கே. விநாயகம் அவர்கள், தமிழில் நாப்பட்ட உறுதிமொழியினைப் புறக்கணித்துவிட்டு ஆங்கிலத்தில் உள்ள உறுதிமொழிப் பத்திரத்தை வலுவில் வாங்கி உறுதி எடுத்துக் கொண்டார்.

ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ., 'கடவுள் பெயரால்', 'மனப்பூர்வமாக' என்ற இரண்டுக்கும் பதிலாக 'மகாத்மா காந்தியின் பெயரால்' என்று புதிய முறையில் உறுதி மொழி எடுத்துக்கொண்டார்.

இத்துடன் உறுதி மொழி எடுக்கும் நிகழ்ச்சிமுடிவுற்றது.

இந்நிகழ்ச்சி முடிவுற்றதும் அண்ணா அவர்களும், மற்ற தி.மு. கழக எம். எல். ஏ.-க்களும் அவையிலிருந்து வெளிவரும்பொழுது பெருவாரியான மக்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

கிராம அதிகாரிகள்

நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவர்

திருச்சி, ஏப். 28—

கிராம அதிகாரிகளின் குறைகளைப் போக்கசென்னை அரசாங்கம் முன்வராவிட்டால், வரும் மே 15-ந் தேதிமுதல் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவது என்று இங்கு நடைபெற்ற கிராம அதிகாரிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது; சுமார் 600 கிராம அதிகாரிகள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

இதுவரையில் கிராம அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வாபஸ்பெற வேண்டும் என்றும் கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மூன்று நான்கு கிராமங்களை ஒன்றாக இணைத்து, ஒரே கிராம அதிகாரியின் நிர்வாகத்தின்கீழ் அவற்றைக் கொண்டுவரும் யோசனை நிர்வாகத்தையே சீர்குலைத்துவிடும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

கா. சீ. க. சட்டசபைக் கட்சித் தலைவர்

வி. கே. இராமசாமி தேர்வு

சென்னை, ஏப். 29—

நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற 16 கா.சீ.க. உறுப்பினர்களும், மற்றும் சமீபத்தில் கா.சீ.க.-வில் சேர்ந்துவிட்டதாகக் கூறப்படும் வேறு 6 சட்டசபை உறுப்பினர்களும் கூடி, உத்திரமேரூர் தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வி. கே. இராமசாமி அவர்களை கா. சீ. க. சட்டசபைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

கன்னியாகுமரி தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டி. எஸ். இராமசாமி துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நடைபெற இருக்கும் சட்டசபைத் தலைவர் தேர்தலுக்கு கா. சீ. க. போட்டியிடுவது என்றும், தோழர் எம். செகன்னாதன் அவர்களை கட்சியின் அபேட்சகராக நிறுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கான்பூர் பஞ்சாலையை மூடிவிட நிர்வாகிகள் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனால் அந்த ஆலையில் வேலை செய்யும் 4,000 தொழிலாளர்கள் வேலையை இழந்து வேதனைப்பட நேரிடும் என்று தெரியவருகிறது.

நம் நாடு

சென்னை 29—4—57 திங்கள்

அழுக்காற்றின் சிகரம்!

தமிழகத்தை மட்டுமல்லாது தென்னகம் முழுவதையும் தொழில் மயமாக்கவேண்டும் என வற்புறுத்திவருவதில் நமது முன்னேற்றக் கழகத்தின் பங்கு என்ன என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருக்கின்றனர். இவ்வகையில் நமது கழகம் இடையறாது ஆற்றிவரும் பணியை தாங்கள் திட்டவட்டமாக உணர்ந்திருக்கின்றனர் என்பதையும், அப்பணியைத் தாங்கள் முழு மனதுடன் ஆதரிக்கின்றனர் என்பதையும் விளக்கமாக வெளிக்காட்டும் வகையில், இலட்சக் கணக்கில் தமிழ் மக்கள் நமது கழக அபேட்சகர்களுக்குப் பொதுத் தேர்தலில் வாக்களித்தும் உள்ளனர். எனவே, நாம் ஆற்றிவரும் பணியையும் அதற்காக நாம் இதுவரை கையாண்டுவரும் முறையையும் இனியும் தொடர்ந்து ஆற்றிவர வேண்டியதுதான் நமது கழகத்தின் கடமையும் தேவையுமாகும்.

தமிழகத்தைத் தொழில் மயமாக்கவேண்டும் என்ற நமது கழகப் பொதுக் கோரிக்கையில், முதன்மையான இடம் பெற்றிருப்பது சேலம் மாவட்டத்தில் கிடைக்கப்பெறும் இரும்புக் கனிப் பொருளைப் பயன்படுத்த, அப்பகுதியில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க வேண்டும் என்ற கோரிக்கையேயாகும். அது பற்றி நமது கழகத் தலைவர்களும், 'நம்நாடு' இதழும் தந்துள்ள விளக்கமும், எழுத்திலும் பேச்சிலும் காட்டிய ஆர்வமும் மட்டற்றவையாகும். அது போன்றேதான் நெய்வேலி நிலக்கரியைத் தோண்டி எடுத்து அதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்க முடிந்த பொருட்கள் அனைத்தையும் உருவாக்க வேண்டும் எனக் கழகம் கோரிவந்திருக்கின்றது.

இத்தகு கோரிக்கைகளின் சிறு கூறாகத்தான், 'நெய்வேலி நிலக்கரி, சேலம் இரும்பு, காவிரி வட்ட எண்ணெய், பரம்பிக்குளம் தண்ணீர்' இவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற சுவரொட்டியை, தேர்தல் நேரத்தில் நமது கழகம் வெளியிட்டிருந்தது. இவ்வாறு பொதுப்படையாகத்தான் தங்கள் விருப்பதை, கொண்ட கருத்தை எவரும் வெளியிடுவர். அவ்வாறு வெளியிட எவருக்கும் உரிமை உண்டு. அதில் தவறோ நியாய விரோதமோ இருப்பதாக அறிவுடை எவரும் எண்ணவும் மாட்டார்கள்—வெளிப்படையாகக் கூறவும் மாட்டார்கள். அழுக்காறு கொண்ட சிறுமதியாளர்கள்தான் அவ்வாறு பொதுப்படையாகக் கூறுவது தவறானது எனக் கண்டிக்க முன்வருவதின் மூலம், தங்கள் அறியாமையையும் அகந்தையையும் மெய்ப்பித்துக்கொள்ளத் துடிதுடிப்பர்.

சேலம் மாவட்டத்தில் கிடக்கப்பெறும் இரும்புக் கனிப்பொருளைப் பயன்படுத்த உருக்குத் தொழிற்சாலை ஒன்று உடனடியாகத் துவங்கப்பட வேண்டும் எனக் கிளர்ச்சி செய்யும் நாம் மட்டுமல்ல எவரும், அங்கு கிடைக்கக்கூடிய இரும்பு கனிப்பொருளின் மொத்த நிறை, அதில் கலந்துள்ள இரும்பு சத்தின் அளவு, மற்றுமுள்ள இரசாயனப் பொருள்களின் தனித்தனி எடை, அதை வெட்டி எடுக்கத் தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அதற்காக அவர்கள் கையாளக்கூடிய மட்ட—உயர்ந்த மண்வெட்டிகள், அம்மண்வெட்டிகளின் அகல நீளம், வெட்டியெடுப்பதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய இயந்திரங்களின் தன்மை, அதைப் பிரித்துக் கோர்க்கும் வகை, அதற்காகச் செலவிடப்படும் தொகை, இவ்வளவையும் தெரிந்திருப்பதுடன், அதற்குத் தேவையான உருக்கு இயந்திரத்தின் தன்மை, அவ்வியந்திரத்தை ஆக்கிய உருக்கின் மூலப் பொருளை வெட்டி எடுத்த இடம், அவ்வாறு வெட்டி எடுக்கப் பயன்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை, அவர்கள் சிந்திய வியர்வையின் அளவு, அதற்கு ஈடாக அவர்கள் பெற்ற கூலியின் மதிப்பு முதலியவற்றையும் தெரிந்திருக்க வேண்டும் என்றும், தெரிந்திருந்தால் மட்டும்போதாது, தெரிந்துள்ளதை நெட்டோலையில் தீட்டி அதைப் பொதுமக்களிடம் வாசித்துக் காட்டி, அதன் பிறகுதான் சேலத்தின் இரும்பைப் பயன்படுத்த உருக்குத் தொழிற்சாலை வேண்டும் என்ற கிளர்ச்சியில் ஈடுபட முன்வர வேண்டும் என்று எவரும் கூற முன்வரார். அவ்வாறு விரிவான விளக்கங் கூறாது சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை வேண்டும் எனப் பொதுவாக எவரும் கோரக் கூடாது எனப்பேச முன்வரும் எவரையும் பயித்தியக்கார விடுதிக்குத்தான் அனுப்பவேண்டும்.

இன்று தொழில் வளர்ச்சிக்காக நடத்தக்கூடிய கிளர்ச்சிகள் பொத்தாம் பொதுவாக இருக்கக்கூடாதாம். ஸ்தூலமாக உருப்படியான யோசனைகள் தந்து நடத்தவேண்டுமாம்.

இவ்வாறு கூறுவதின் மூலம் விதண்டாவாதிகள் நமது தொழில் கோரிக்கைக்குக் களங்கம் கற்பிக்க முயற்சிக்கின்றனர். அதுவுமன்றி, இவ்வாறு குறிப்பிடுவதின் மூலம், நமது கழகத்தவருக்கு தொழிலைப் பற்றிய நுண்ணறிவு கிடையாது என நையாண்டி செய்யவும் முன்வருகின்றனர். அதே நேரத்தில், தங்களை எல்லாம் தெரிந்த 'சகலகலாவல்லவர்கள்' எனப் பொதுமக்கள் முன் காட்டிக் கொள்ளவும் முயற்சிக்கின்றனர்.

ரூ. 42 கோடி முதலீடு!

இந்தியத் திரைப் படத் தொழில் பற்றி ஒரு புள்ளி விவரம்

1956-ம் ஆண்டு இறுதியில் இந்தியாவில், படத் தயாரிப்பு நிறுவனங்கள் 200; திரைப் பட விநியோக நிறுவனங்கள் சுமார் 900; 'ஸ்டுடியோ'க்கள் 60; திரைப் பட ஆராய்ச்சிக்கூடங்கள் 40—ஆக இருந்ததாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிலில் மொத்தம் சுமார் ஒரு இலட்சம் பேர் பணியாற்றிவந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சுமார் ரூ. 42 கோடி இந்தத் தொழிலில் முதலீடு செய்யப்பட்டிருந்ததாம்!

இந்தத் தொழிலின் மூலம் வருமானமாக ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 25 கோடி கிடைத்துவந்ததாம்!

1956 ஆண்டு இறுதியில் இந்நாட்டில் மொத்தம் 3,329 சினிமா கொட்டகைகள் (996 'டூரிங்' சினிமாக்களும், தற்காலிக சினிமாக்களும் உட்பட) இருந்தனவாம்!

ஆண்டுதோறும் சுமார் 60 கோடி பேர் படம் பார்த்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சமுதாய சமத்துவக் கொள்கை சொல்லளவிலேயே நிற்கிறது!

சேரிகளின் பொறுப்பு கைமாறுவதினால் பலன் ஏதேனும் உண்டா?

எள்ளி நகையாடுவதற்குரிய நிலையில் இன்னுமிருப்பது வெட்கக்கேடல்லவா?

"காந்தியாரின் சமுதாய சமத்துவக் கொள்கைக்குச் சொல்லளவிலேயேதான் பெரும்பாலும் ஆதரவு காட்டப்பட்டு வந்ததென்பதற்கு, இப்போதுள்ள சேரிகளின் நிலைமையே தக்கசான்று. செயலளவில் அவர் எதிர்பார்த்திருந்த மாற்றம் இனிமேல்தான் ஏற்படக்கூடும் என்று தெரிகிறது.

"சென்னையைப் பொறுத்தவரையில், இப்போது ஏற்பட்டுள்ள 'மாற்றம்' அரசாங்கப் பொறுப்பிலிருந்த சேரிகள், நகரசபையின் நிருவாகத்திற்கு ஒப்படைக்கப்படுவதேயாகும்! இம்மாறுதலின் பயனாக முன்னர் இருந்த 49 சேரிகளோடுகூட, அரசாங்கத்தின் 56 சேரிகளும் சேர்ந்து, 105 சேரிகள் நகரசபையின் தனிப் பொறுப்பாகின்றன. இதனால், சேரிகளின் நிலைமையைக் குறித்து இனிச் சாட்டப்படும் குற்றங்கள் அரசாங்கத்தைச் சாரமாட்டா.

"சேரி ஒழிப்புத் திட்டப் பிரச்சார விழாவிற்குப் பிறகு, நகரசபையின் முயற்சிகளில் ஒரு முக்கியமான பகுதி இத்துறையில் செல்லவேண்டியதாயிருக்கும். இப்பொறுப்பு மாற்றம் நற்பயனை அளிக்கக்கூடியதா என்பது ஆராயத்தக்கது.

"எல்லா அதிகாரங்களையும் தம்மிடத்தே கொண்ட அரசாங்கத்தாரே, 56 சேரிகளைச் சீர்திருத்தி மாற்றியமைக்க இயலவில்லை என்றால், இதற்கு முன் நமது பொறுப்பாக இருந்து, மாறாத தன்மையிலிருந்து வந்த 49 சேரிகளோடு, புதிதாக 56 சேரிகளையும் ஏற்றுக்கொள்ள விருக்கும் குறைந்த அதிகாரமுள்ள நகரசபையால் என்ன செய்ய முடியும்? பொதுநல ஆர்வங்கொண்ட—பொறுப்புவாய்ந்த தலைவர்களுடைய அதிகாரவரம்பிற்குட்பட்ட 105 சேரிகளினுடைய கதி இவ்வாறென்றால், தனிப்பட்டவர்களின் நிலங்களிலுள்ள பொறுப்பற்ற 206 சேரிகளைப்பற்றிக் கேட்க வேண்டியதேயில்லை."

இவ்வாறு, 'இன்றியமையாத சீர்திருத்தம்' என்ற தலைப்பில், 25—4—57 'தமிழ் நாடு' இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டு, மேலும் எழுதியிருப்பதாவது:—

"அரிசனத் தலைவர்கள் மத்திய அரசாங்கத்திலும், மாகாண அரசாங்கங்களிலும் அமைச்சர்களாக இருந்துவந்த போதிலும், அச்சமூக மக்களின் வாழ்க்கை நிலை முன்னிருந்த நிலையிலேயே பெரும்பாலும் இருப்பது அவர்களுடைய குறை என்று கூறிவிட முடியாது; தம்முடைய சமூகத்தாரின் குறைகளை அவர்கள் கட்டாயம் வலியுறுத்தியிருப்பார்கள் என்பது திண்ணம்.

ஆனால், பயனற்ற வீண் விரயத் திட்டங்களில் அரசாங்கம் பெரும் பொருளைச் செலவிட்டு வருவதால், அரிசன மக்களின் சீர்கேடான வாழ்க்கை நிலை உயருவதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அரசாங்கத்திடம் பொருள் வசதியில்லை.

"இதற்காகத்தான், இன்றியமையாத முதன்மையான சீர்திருத்தங்களுக்கு அரசாங்கம் முதலிடம் கொடுக்கவேண்டுமென்ற கருத்து இங்கு அடிக்கடி வற்புறுத்தப்படுகின்றது.

"இந்தியா முழுவதிலும் ஏறத்தாழ 6 கோடி அரிசன மக்கள் இருக்கிறார்கள். இத்தொகையில், கிராமப் பகுதிகளில் 4½ கோடிக்கு அதிகமாகவும், நகரப் பகுதிகளில் 51 இலட்சத்திற்கு மேற்பட்டதாகவும் அரிசன மக்கள் இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

"பொதுவாக, இப்பழைய கணக்கை, இப்போதுள்ள நிலையோடு திருத்தியமைத்தால், 6 கோடி அரிசன மக்கள், நாட்டு மொத்த எண்ணிக்கையில் ஆறில் ஒரு பகுதியெனக் குறிப்பிடுவது மிகையாகாது.

"இச் சமுதாயம், உலக மக்கள் இந்தியாவை எள்ளி நகையாடுவதற்குரிய நிலையில் இன்னும் இருந்துவருவது குறித்து நாம் வெட்கப்படாமலிருக்க முடியாது.

"பிற நாடுகளிலுள்ள நிற வேற்றுமை உணர்ச்சியைக் கண்டிக்கும்போதெல்லாம் நம் நாட்டிலிருந்து வரும் தீண்டாமையைப் பற்றிய நினைவு மனத்தைப் புண்படுத்துகின்றது.

"சென்றதை நினைப்பதைவிட, இனி நடப்பதில் கவனஞ்செலுத்துவதே முக்கியமானதாகையால், இப்போது சென்னை அரசாங்கம் தொடங்க நினைத்திருக்கும் திட்டத்திற்கு ஊக்கமளிப்பது சீர்திருத்தவாதிகளுடைய கடமையாகும்.

"புதிய திட்டத்தின்கீழ், ஒவ்வொரு சேரிக்கும் ரூ. 2 இலட்சம் முதல் ரூ. 3 இலட்சம் வரையில் செலவிடப்படுமென்று தெரிகிறது. இக்கணக்கின்படி ரூ. 40 இலட்சம் தேவைப்படுகின்றது.

"சென்னை நகரப் பகுதிச் சேரிகளில் 56,000 குடும்பங்கள் வசிக்கின்றன; இவற்றில் வாழும் மொத்த அரிசன மக்களின் எண்ணிக்கை 2,60,000. இவர்களுடைய வாழ்க்கை நிலை இவ்வைந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் அடியோடு மாற்றியமைக்கப்படுமானால், அது பெருமைப்படத்தக்க இன்றியமையாத சீர்திருத்தம் என்றே கூறவேண்டும்."

உணவு நிலைமை மோசமாகிவிட்டது!

ஐந்தாண்டுத் திட்டத்திற்கு புதிய 'மெருகு' பூசப்படும்?

புதுடில்லி, ஏப். 27—

உணவு நிலைமை மோசமாகிக் கொண்டு வருவதால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தத் திட்டங்களுக்கு முதலிடம் தருவது என்பதை புதிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வருடாந்தரத் திட்டம் வற்புறுத்துமாம்.

திட்டத்தின் மொத்த இலட்சிய அளவுகளைத் திருத்தும் உத்தேசம் கிடையாதாம்.

விவசாய உற்பத்தி இலக்குகள் நிறைவேறாமல் போனதால், இதைச் சமாளிக்க சமுதாய அபிவிருத்தி தேசிய விஸ்தரிப்புப் பிரதேசங்களில்தான் முக்கியமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமாம்.

தண்ணீர் இருந்தும் சாகுபடி நடைபெறாத விசித்திரம்!

உணவு உற்பத்தி குறைந்துவிட்டதற்கு மாநில சர்க்கார்களே காரணம்?

முசௌரி, ஏப். 27—

"1952—53-ல் உணவு உற்பத்தி 583 இலட்சம் டன்னாகவும், 1953—54-ல் 687 இலட்டம் டன்னாகவும் அதிகரித்தது; ஆனால், 1954-55-ல் உணவு உற்பத்தி 658 இலட்சம் டன்னாகக் குறைந்துவிட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருடத்தில் உணவு உற்பத்தி மேலும் குறைந்து 635 இலட்சம் டன்னாகிவிட்டது."

ஏராளமான பணத்தைச் செலவிட்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்துகொடுக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வசதிகளை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்குமாறு மாநில சர்க்கார்களை திட்டக்குழு உப-தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரி கேட்டுக்கொண்டு மேலும் சொன்னார்:—

"இந்த நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு 63 இலட்சம் ஏக்கர் நிலங்களை மாநில சர்க்கார்கள் சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்; ஆனால், 40 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குத்தான் பாசன வசதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏராளமான செலவில் பாசன வசதிகள் செய்துகொடுத்தும் பயன்படுத்தப்படாமலிருக்கிறது; இது பெரும் தேசிய நஷ்டமாகும்.

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமையில் கழகவெற்றிக்குப்பாராட்டுக்கூட்டம்

மறைந்த பழையகோட்டை அருச்சுனன் உருவப் படத்தை சங்கராண்டாம்பாளையம் குமாரபட்டக்காரர் திறந்து வைத்தார்

கொள்கை வீரனின் சிறப்புமிக்க பணிகளுக்குப் புகழ்மாலை

வரவேற்புக்கு ஈ. வெ. கி. சம்பத் நன்றியுரை

தாராபுரம் வட்டம் குட்டப்பாளையத்தில் நாமக்கல் மக்கள் சபைத் தொகுதியில் தி. மு. கழகம் பெற்ற வெற்றியைப் பாராட்ட ஓர் மாபெரும் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

இடையிடையே மழை பெய்தபோதிலும், மக்கள் ஆர்வத்தோடு கூட்டத்தைச் சிறப்புற நடத்தினர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு குட்டப்பாளையம் தோழர் சாமிநாதன் அவர்கள் முன்மொழிய, பொன்னுபுரம் திரு. கே. எம். சுப்பராயன் அவர்கள் வழிமொழிய கோவை மாவட்ட தி. மு. க. முன்னாள் செயலாளர் பெத்தாம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

அடுத்து மாணவி கே. எஸ். புவனேசுவரி திராவிட நாட்டுப் பண் பாட விழா இனிது தொடங்கிற்று.

மறைந்த மாவீரன் பழையகோட்டை அருச்சுனன் அவர்களது திருஉருவப் படத்தைச் சங்கராண்டாம்பாளையம் குமார பட்டக்காரர் திரு. குமார ரத்தின வேணு உடையார் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

சாணார்பாளையம் திரு. எஸ். எம். இராமசாமி அவர்கள் மறைந்த மாவீரன் அருச்சுனன் அவர்கள் நாட்டுக்கும் திராவிட இயக்கத்துக்கும் ஆற்றிய பணிகளைக்குறித்தும் அன்றைய அவரது பணிகள் இன்று கோவை மாவட்டத்தில் எத்தகைய விழிப்பையும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவையும் உண்டாக்கியிருக்கிறது என்பதனையும் விளக்கி உரையாற்றினார்.

அடுத்து, தாராபுரம் தோழர் லத்தீப் அவர்கள் சிறிதுநேரம், நாமக்கல் மக்கள்சபைத் தொகுதியில் வெற்றிபெற்ற தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பாராட்டிப் பேசினார்.

அடுத்து, குட்டப்பாளையம் தோழர் சாமிநாதன் அவர்களும் தாராபுரம் தொகுதியில் தி. மு. கழக ஆதரவுடன் போட்டியிட்ட பொன்னுபுரம் தோழர் கோவிந்தசாமி அவர்களும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு வாழ்த்து இதழ்கள் வாசித்து அளித்தனர்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட வாழ்த்துக்களுக்கும், வரவேற்புக்கும் நன்றிகூறி பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கி, திராவிடத்தின் ஒரே விடுதலை இயக்கம்—திராவிடத் தேசிய அமைப்பு தி. மு. கழகம்தான் எனக் கூறினார்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் திராவிடம் புறக்கணிக்கப்பட்டுள்ள கொடுமையினை டில்லியில் கழகம் எடுத்துரைத்துப் போராடும் எனக்கூறி, தி. மு. கழகத்தில் அனைவரும் சேர்ந்து பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அ. இ. நான்காவது கைத்தறி வாரம்

சென்னையில் கண்காட்சி நடைபெறும்

புதுடில்லி, ஏப். 27—

வரும் மே மாதம் 5-ந் தேதி முதல் 11-ந் தேதி வரையில், நான்காவது இந்திய கைத்தறி வாரம் கொண்டாட இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்ட 'கைத்தறி வார' விழாக்கள் மூலம் மக்கள், கைத்தறி அவசியத்தை உணருவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன.

இந்த ஆண்டில் வீட்டிற்கு வீடு பல்வேறு ரகமுள்ள கைத்தறி ஆடைகளை வண்டிகளில் எடுத்துச் சென்று, மக்கள் வாங்குவதற்குத் தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கிய அம்சமாகும்.

இக்கொண்டாட்டத்திற்கென மத்திய அரசாங்கம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ரூ. 12,000 அனுமதித்திருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனியாக வண்டிகளை வாடகைக்கு ஏற்படுத்திக்கொள்ளுவதற்காக, ஒவ்வொரு சங்கமும் மத்திய சர்க்காரிடமிருந்து ரூ. 10 நன்கொடையாகப் பெறும்; இவ்வண்டிகள் துணிகளை ஏற்றிச் சென்று விற்பனை செய்யும்.

சென்னை மாநிலத்தில் உள்ள 800 கூட்டுறவு நிறுவனங்களும் இதில் பங்கு கொள்ளும்.

சென்னையில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தவும் அமைச்சர்கள் பங்கு கொள்ளவும் ஏற்பாடாகி வருகிறது.

எழும்பூரில் உள்ள கூட்டுறவுச் சங்கத் திடலில் கைத்தறிக் கண்காட்சி ஒன்று நடைபெறும்; இக்கண்காட்சியில் முக்கிய கைத்தறி நிறுவனங்கள் பங்கு கொள்ளும்.

இந்தக் கைத்தறி வாரத்தில் விற்பனையாகும் கைத்தறி துணிகளுக்கு விசேடக் கழிவு இனத்தில் 3 புதிய காசுகள் தள்ளுபடியாகத் தரப்படும்.

தானே இயங்கி நேரத்தை அறிவிக்கும்!

பேசும் கடிகாரம் சென்னையிலும் நிறுவப்படுமாம்

சென்னை, ஏப். 25—

டில்லியில் 'கன்னோட் பிளேஸ்' தொலைபேசி நிலையத்தில் தானே இயங்கி தொலைபேசியில் மணி அறிவிக்கும் தனிச் சிறப்புப் பெற்ற கடிகாரம் பரீட்சார்த்தமாக நிறுவப்பட்டிருக்கிறது. இச்சாதனம் இந்தியாவில் நிறுவப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

டில்லியில் இது சரியானபடி இயங்கிவருவதால், இனி சென்னை, பம்பாய், கல்கத்தா, நாகபுரி, கான்பூர் ஆகிய இடங்களிலும் இம்மாதிரியான கடிகாரங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கடிகாரப் பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்டவையாகும். டெலிபோனில் மணி தெரிந்துகொள்ள விரும்புவோர்களுக்கு இது மிக்க உதவியாக இருக்கும்.

பச்சை மிளகாய் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுமாம்

சென்னை, ஏப். 27—

சென்னைத் துறைமுகத்திலிருந்து, இலங்கைக்கு இனி சிறிதளவு பச்சை மிளகாய் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போத்தனூரில் புதிய தொழிற்சாலை

ரூ. 24 இலட்சம் செலவில் திட்டம்

புதுடில்லி, ஏப். 26—

இரயில்வே இலாகாவுக்குத் தேவையான 'சிக்னல்—டெலிகம்யூனிகேஷன்' கருவிகளைத் தயாரிப்பதற்குத் திருச்சியில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது; இங்கு தயாராகும் கருவிகளின் அளவு நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லையாம்.

எனவே போத்தனூரில் புதிதாக இரண்டாவது தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

இதற்கு மொத்தம் ரூ. 24 இலட்சம் செலவாகக்கூடுமாம்.

கிண்டியில் மத்திய மிதியணி நிலையம்

காரணம் என்ன?

சென்னை, ஏப். 25—

வரும் கல்வி ஆண்டு துவக்கத்திற்குள், சென்னை—கிண்டியில், மத்திய மிதியணி உற்பத்தி நிலையம் ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இங்கு ஆண்டுக்கு 100 பேர்களுக்கு நவீன முறையில் மிதியணித் தயாரிப்பு தொழிலில் பயிற்சி அளிக்கப்படுமாம். இந்த நிலையம் சிறு ரகத் தொழில் அபிவிருத்தி அதிகாரியின் பொறுப்பில் நடத்தப்படுமாம். இந்த நிலையத்திற்கு ஐந்து நிபுணர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ளனராம்.

தோல் சம்பந்தமாக சென்னை பெற்றுள்ள சிறப்பே, இந்த நிலையம் இங்கு ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் என்றும், மற்றொரு நிலையத்தை ஆக்ராவில் இந்திய அரசு ஏற்படுத்தக்கூடுமென்றும் தெரியவருகிறது.

செம்மறியாடுகளின் விருத்தியில் அக்கறை

புதுடில்லி, ஏப். 26—

இந்தியாவில் செம்மறியாடுகளின் இனவிருத்திக்காகவும், கம்பளி உற்பத்தியின் அபிவிருத்திக்காகவும், 1959 மார்ச் 31-ந் தேதிக்குள்ளாக, மொத்தம் ரூ. 150 இலட்சம் செலவில் 396 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுவிடுமாம்.

செம்மறியாடு வளர்ப்பையும், கம்பளி உபயோகத்தை அபிவிருத்தி செய்வதும், உயர்ந்த இன செம்மறியாடுகளைக்கொண்டு அந்தந்தப் பகுதிகளிலுள்ள செம்மறியாடுகளின் 'தர'த்தை உயர்த்தும் பொருட்டு, கலப்பினப் பெருக்கம் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்துவதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதற்காக இந்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு, 1957-58-ம் ஆண்டுக்கு மானியமாக ரூ. 10 இலட்சமும், கடனாக ரூ. 4 இலட்சமும் வழங்கியிருக்கிறது.

விசேட இயந்திரங்கள் வருகின்றனவாம்!

புதுடில்லி, ஏப். 26—

பெரம்பூரிலுள்ள இரயில் பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான 91 விசேட இயந்திரங்கள் அடுத்த சில வாரங்களில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு விடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலிருந்து இந்த இயந்திரங்கள் வருகின்றனவாம்.

ஏற்கனவே 100 வகை இயந்திரங்கள் கப்பல்களில் வந்து கொண்டிருக்கின்றனவாம்.

இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் மேற்கு ஜெர்மனி, போலந்து, செக்கோஸ்லாவியா ஆகிய நாடுகளிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது.

சென்னை நீர்ப்பாசன திட்டங்களுக்கு டில்லி தரும் உதவியின் இலட்சணம்

வைகை, அமராவதி, மேட்டூர் திட்டங்களுக்கு சென்னை சர்க்கார் பெற்ற கடன் எவ்வளவு?

புதுடில்லி, ஏப். 26—

1956—57-ம் ஆண்டிற்கு சென்னை அரசாங்கத்தின் மூன்று நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் மொத்தம் ரூ. 1,93,00,000 கடனாக அளிக்க முன்வந்திருக்கிறது.

பற்றாக்குறைப் பகுதிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இத்துடன் மொத்தம் ரூ. 4,86,00,000 கடனாக சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் பெற்றுள்ளதாம்.

தற்போது தரப்படும் கடன் தொகை, சென்னை அரசாங்கம் மேற்கொண்டுள்ள வைகை திட்டம், அமராவதி நீர்த் தேக்கத் திட்டம், மேட்டூர் கால்வாய் திட்டம்—ஆகிய மூன்று திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுமாம்.

வைகை திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வைகை திட்டத்திற்கென ரூ. 226 இலட்சம் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது; ஆனால் திட்டத்தின் செலவு ரூ. 330 இலட்சம் என்று முதலில் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் முடிந்ததும் மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 20,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரியார் ஆற்றின் தண்ணீரை வீணாகாமல் தடுத்துப் பயன்படுத்த இந்த ஆற்றின்மீது 11,675 அடி நீளமுள்ள அணை கட்டப்படுமாம்.

அமராவதி நீர்த்தேக்கத் திட்டம்

இந்தத் திட்டம் முடிந்ததும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 15,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமாம். திட்டத்தின் மதிப்பு ரூ. 2,96,71,000 ஆகும்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 147 இலட்சம். இந்த அணை 3,594 அடி நீளமுள்ளதாகும்.

மேட்டூர் கால்வாய்த் திட்டம்

இந்தக் கால்வாய்த் திட்டம் முடிந்ததும் சேலம், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 45,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமாம். இதற்கு ரூ. 185 இலட்சம் செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து கால்வாய் வெட்டி, தண்ணீர் வசதியை உண்டாக்குவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

சேலம் மாவட்டத்தில் தொழிற்திட்டங்கள்

அரசியலார் அனுமதி: கலெக்டர் தகவல்

சேலம், ஏப். 25—

சேலம் மாவட்ட திட்டக்குழு கூட்டம் இன்று மாவட்ட கலெக்டர் எம். ஜி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. சென்ற மார்ச் முடிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களை கலெக்டர் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

"சேலம் மாவட்டத்தில் 1,03,130-தறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன; ரூ. 1,51,800 தறிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளன.

சேலத்தில் 'போக்ஸ் காம்பவுண்டி'ல் ரூ. 22,65,000 செலவில் கைத்தறி தொழில் இயந்திரங்கள் செய்யும் தொழிற்சாலை நடத்துவதற்கான திட்டத்தையும் ரூ. 2,22,770 செலவில் செருப்பு தயாரிக்கும் தொழிற்சாலைத் திட்டத்தையும் அரசியலார் அனுமதித்துள்ளனர்.

இந்தியப்பேரரசின் 'டெக்ஸ்டைல் இன்ஸ்டிடியூட்' சென்னையிலிருந்து சேலத்திற்கு மாற்றப்படுவதால், சேலம் 'போக்ஸ் காம்பவுண்டி'ல் 56-ஏக்கர் நிலம் உபயோகப்படுத்தப்படும்.

நாமக்கல் வட்ட சேந்தமங்கலத்தில் ரூ. 10 ஆயிரம் செலவில் கிராமத் தோல் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்.

துரிதமாக நடைபெற்றுவரும் கிருஷ்ணகிரி அணைக்கட்டுக்காக செலவு செய்ய திட்டமிட்ட ரூ. 43,75,000-ல், சுமார் ரூ. 41,64,000 இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி அணைக்கட்டிலிருந்து விவசாயத்திற்கு இந்த ஆண்டு அக்டோபர் திங்களில் தண்ணீர் திறந்து விடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் கால்வாய்த் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 10,70,000-ல் இதுவரை ரூ. 9,20,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்திற்கு மொத்தம் 42 'பிளாக்'குகள் 'தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ்' அரசியலார் அனுமதித்துள்ளனர்.

விவாதத்தில் சென்னை சட்டமன்ற உறுப்பினர்களான எம். பி. சுப்பிரமணியம், எஸ். நாகராச மணியகார், கே. எஸ். சுப்பிரமணியம், பி. எம். முனுசாமி கவுண்டர் முதலியோர் கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டில் 'தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ்' சேலம் மாவட்டத்தில் மத்தூர், மொரப்பூர், எடப்பாடி, எத்தாப்பூர், உத்தனபள்ளி, மோகனூர், வாழப்பாடி, நாமகிரிப்பேட்டை, மேச்சேரி, பென்னாகரம் அல்லது நல்லம்பள்ளி ஆகிய 'பிளாக்கு'களை வேலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு அரசியலாரைக் கேட்டுக் கொள்ள முடிவு செய்யப்பட்டது. (ந. - நி.)

காஞ்சியில் கால்கோள் விழா

அண்ணா அவர்களின் சிறப்புரை

காஞ்சிபுரம், ஏப். 25—

காஞ்சி—நகர மன்றத்தாரால் நடத்திவரும் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்திற்கான கால்கோள் விழா அண்ணா அவர்களால் இன்று மாலை 6 மணிக்கு மிக சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் நகர மன்றத் தலைவர் திரு. பெருமாள் அவர்கள் வரவேற்று, காஞ்சி-அ. க. தங்கவேலர் அவர்களைத் தலைமையேற்கும்படி முன்மொழிய, தோழர் பாபு வழிமொழிய திரு. தங்கவேலர் தலைமையேற்று உரையாற்றினார்.

நகரமன்ற உறுப்பினர் தோழர் கன்னியப்பன், புலவர்-சஞ்சீவி, பச்சையப்பன் கல்லூரி முதல்வர் சண்முகசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்திற்கான கால்கோள் நாட்டி சிறப்புரையாற்றினார்.

தலைவரின் முடிவுரைக்குப் பின் நகரமன்ற உறுப்பினர் தோழர் அருணாசல(முதலியார்) நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

அண்ணா அவர்களுக்கு, கால்கோள் விழா நடைபெறுவதற்கு முன், நகர மன்றத்தாரால், கவுன்சில் மண்டபத்தில் ஓர் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

'குடியரசுத் தலைவர் தேர்தலில் கலந்துகொள்ளமாட்டோம்'

காரணங்களை விளக்கி தி. மு. கழக சட்டசபைக் கட்சித் தீர்மானம்

சட்டசபைத் தலைவர் தேர்தல் குறித்தும் முடிவு

தி. மு. கழக சட்டசபைக் கட்சிக் கூட்டம் 28—4—57 காலை 11-30 மணிக்கு, சென்னையில், தோழர் மு. கருணாநிதி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கட்சித் தலைவர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தோழர்கள் க. அன்பழகன், மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, எம். பி. சுப்பிரமணியம், தோழியர் சத்தியவாணி முத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். செல்வராஜ், ஆனந்தன், சி. நடராசன், சந்தானம், இருசப்பன், அண்ணாமலை ஆகிய தி. மு. கழக சட்டசபைக் கட்சி உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சட்டசபைத் தலைவர், துணைத் தலைவர், குடியரசுத் தலைவர் தேர்தல்களில் தி. மு. கழக சட்டசபைக் கட்சி கலந்துகொள்வதா இல்லையா என்பது குறித்தும், மற்றும் பல பிரச்சினைகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :—

1. இந்திய யூனியன் குடி அரசுத் தலைவர் பதவிக்கு நடைபெறும் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்வதில்லையென்று கீழ்க்கண்ட காரணங்களால் தீர்மானிக்கிறது :—

(அ) குடியரசுத் தலைவர் பதவிக்கு மீண்டும், மீண்டும் ஒருவரையே நியமிப்பதானது ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல என்ற எண்ணம் பொதுவாக மக்களிடம் நிலவி வருவதாலும், அத்தகைய போக்குத் தடுக்கப்பட வேண்டும் என்ற காரணத்தாலும், மக்களுடைய இந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கும்வகையில், தி. மு. கழகம் குடி யரசுத் தலைவர் தேர்தலில் கலந்துகொள்ளவில்லை.

(ஆ) மேலும், குடி அரசுத் தலைவர் பதவிக்கு ஒரு வடநாட்டாரையே காங்கிரஸ் கட்சி மீண்டும் நியமித்தது தென்னாட்டின் மீது வடநாடு வெளிப்படையாகத் திட்டம் வகுத்து ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை உறுதிப்படுத்துகிற காரணத்தால், தி. மு. கழகம் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளாததன் வாயிலாக வடநாட்டு ஆதிபத்தியத்திற்கு இங்கு உள்ள எதிர்ப்பை வெளிப்படுத்துகிறது.

(இ) குடி அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் மற்ற இரண்டு அபேட்சகர்களும், பிற்போக்கான வகுப்புவாத சக்திகளைச் சார்ந்தவர்களாயிருப்பதால், தி. மு. கழகம் அந்த அபேட்சகர்களை ஆதரிக்க முடியாத நிலையிலிருக்கிறது.

(ஈ) காங்கிரசல்லாத மற்றக் கட்சிகள், குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத இன்றைய சூழ்நிலையில், காங்கிரஸ் கட்சியே தென்னாட்டவரின் விருப்பத்தை மதித்து நிறைவேற்றுகிற முறையில் ஒரு தென்னாட்டவரை நியமிக்காததன் மூலம் ஜனநாயகப் பண்பைக் காப்பாற்றத் தவறிவிட்டது, என்பதை எடுத்துக்காட்டும் முறையில் தி. மு. கழகம் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளாமலிருந்து விடுகிறது.

2. சட்டசபைத் தலைவர்—தேர்தலுக்கு தி. மு. கழகம் போட்டியிடுவதில்லையென்றும், ஆனால் இத் தேர்தல் குறித்து பிறகட்சிகளுடன் கலந்துபேச செயலாளர்களுக்கு இக்கூட்டம் அதிகாரமளிக்கிறது.

தி. மு. கழக சட்டசபைக் கட்சியினர் பொருளாளராகத் தோழியர் சத்தியவாணி-முத்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

விருந்து

அன்று பகல் தோழர், மு. கருணாநிதி அவர்கள் இல்லத்தில் அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது.

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப் பயணம்

மே. 1 : கள்ளக்குறிச்சி
2 : காலை 7-30 மணி : சின்னசிரகப்பாடி (சேலம் மாவட்டம்)
மாலை 4-30 மணி : வலையசெட்டிப்பட்டி
3 : காலை 7-30 மணி : ஆவணிப்பேரூர்
மாலை 4-30 மணி : சித்தூர் (சேலம் மாவட்டம்)
இரவு 7 மணி : கடையாம்பேட்டை
4 : காருபட்டி (சோழவந்தான்)
5 : கரூர்
6 : பொஞ்சனூர்
7 : கல்வார்பட்டி
8 : குழிலியம்பாறை

முகவரி மாற்றம்

நெல்லை—வில்லாளன் எம். ஏ., 9. ஏ. கன்னிராமப்பிள்ளை தெரு, சிதம்பரம் (தெ. ஆ.)

மே தின விழா

★

திருவள்ளூர் :

1—5—57 மாலை 6 மணிக்கு, திருவள்ளூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் தி. நா. சம்பந்தம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, ஏ. கே. வில்வம், எச். ஏ. கனி ஆகியோர் பேசுவர்.

அறந்தாங்கி :

1—5—57 மாலை 6 மணியளவில், வ. உ. சி. திடலில், தி. மு. கழகச் சார்பில் நடைபெறும்; தோழர்கள் புலவர் - அறிவுடைநம்பி, ஒக்கூர்-ஏ. மீரா ஆகியோர் பேசுவர்.

திருச்சி - சங்கிலியாண்டபுரம் :

1—5—57 மாலை 6 மணிக்கு சங்கிலியாண்டபுரத்தில், தி. மு. கழகச் சார்பில், தோழர் தா. ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எஸ். எஸ். இளங்கோ, புலவர் எஸ். ஏ. நாகராஜன், எம். எஸ். மணி, கே. காமாட்சி ஆகியோர் அன்று மாலை 5 மணிக்கு, மாணிக்கமண்டலிருந்து தோழர் ஜி. எம். செரிப் தலைமையில் ஊர்வலம் நடைபெறும்.

புதுவை :

1-5-57 மாலை 6-30 மணிக்கு, ஒதியஞ்சாலைத் திடலில், தோழர் ஜ. பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள், காஞ்சி - கலியாணசுந்தரம், சி. பி. சிற்றரசு, கோ. சுப்பிரமணியன், சு. கிருஷ்ணசாமி, வ. நாராயணசாமி ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

உலகங்காத்தான் :

பிள்ளையார் கோவில் முன்பு
1—5—57 மாலை 6-மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : வி. டி. இளையாப்பிள்ளை
பேசுவோர் :
என். வி. நடராசன்
மு. பாண்டியன்
மா. தங்கவேல்

★

மீனம்பாக்கம் கிராமம் :

30—4—57 மாலை 6-மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
தலைவர் ; தி. ந. சம்பந்தம்
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து
முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

தேவரப்பன்பட்டி :

30—4—57 மாலை 6-மணிக்கு
தலைவர் : வி. எஸ். எஸ். மணி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
சிற்றுளி-ஏ. சுப்பிரமணியம்
பா. மு. பாலுசாமி

'மே தின விழா'வும்-

தி. மு. க. எம்.எல்.ஏ.-க்களுக்குப்

பாராட்டு விழாவும்

★

1—5—57 புதன் மாலை 6 மணிக்கு, சென்னை—நேப்பியர் பூங்காவில், சிம்சன் அண்டு குரூப் கம்பெனி தி. மு. கழக தொழிலாளர்கள் சார்பில், தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் மேற்படி விழாக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணா, மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

பாராட்டுக் கூட்டம்

★

30—4—57 மாலை 6-மணியளவில், சென்னை-நுங்கம்பாக்கம் சிந்தனையாளர் கழகச் சார்பில், சிவசண்முகம் பிள்ளைத் தெருவில், தோழர் டி. தாமோதரன் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பேராசிரியர் க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கே. வில்வம், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

அண்ணா விளக்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள்?'—என்ற மனஅரிப்புக் கொண்டவர்களுக்கு, காரண விளக்கம் தந்தால்தான், அவர்களின் மனஅரிப்பு அடங்குகிறது!

உண்மை இதுதான்!

"தியாகராயர் கவின் கலை மன்றத்தார் எங்களை அழைத்துப் பாராட்டுவதற்கு உள்ள உண்மையான காரணம் எல்லாம், அவர்களுக்கு எங்களை அழைப்பதிலே மகிழ்ச்சி! எங்களுக்கு அவர்களோடு கலந்துறவாடுவதில் மகிழ்ச்சி! அவ்வளவுதான்! வரவேற்புப் பேசுகையிலேயே தோழர் அறிவழகன் கூறினார் — 'தியாகராயநகரில் உள்ள சிலரை அழைக்கிறோம்—அவர்கள் வரமறுக்கிறார்கள்; அவர்கள் வரவேண்டுமென்பதற்காக, இலவச அனுமதிச் சீட்டுகளைத் தந்தும் அழைக்கிறோம்—என்றாலும் அவர்கள் வருவதில்லை,' என்று!

"இப்படி தியாகராயநகரிலிருப்பவர்கள் இங்கேவர அஞ்சுகிறார்கள். நாங்களோ அழைக்காமல் கூட வருபவர்களாயிருக்கிறோம். அந்த அளவுக்கு மன்றத்தாரும் நாங்களும், ஒரு தனிப்பட்ட குழுக்குள்ளே சிக்கிக் கொண்டவர்களாயிருக்கிறோம்.

தியாகராய நகரில் இருப்பவர்கள் இங்கே வர அச்சப்படுகிறார்கள். நாமோ, 'நம்மை அவர்கள் அழைப்பார்கள்,' என்று எதிர்பார்க்கிறோம்; ஆனால், அவர்கள் அழைப்பதில்லை!

"எனவே அதற்கும் இதற்கும், அவர்களுக்கும் நமக்கும் உள்ள பேதங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது.

"இந்தப் பேதத்திற்குக் காரணம், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல—ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம். இப்படி ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதற்கு, இடையில் யாரோ—ஒருவர் காரணமாகிறார். இந்தநிலை மாறியாக வேண்டும்.

வளரட்டும்!

இங்கு இதுபோன்ற கலை மன்றங்கள் பணியாற்றுவதும், அதில் மக்கள் பெரும் பங்கு கொள்வதும் வரவேற்கத் தக்கதாகும். அந்த வகையில் கவின்கலை மன்றத்தாரின் பணி மென்மேலும் வளர்ந்து, இந்தப் பகுதி மக்களுக்கு நல்லன செய்யவேண்டுமென விழைகிறேன்.

தகரட்டும்!

"கலையும் கல்வியும், ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமே வரக்கூடியது என்ற மனப்பாங்கு, கொஞ்சம் கொஞ்சமாக—மெள்ள மெள்ள ஆனால் உறுதியாகத் தகர்ந்து வருகிறது. அந்த மனப்பாங்கு முழுவதுமாகத் தகர இந்த மன்றம் பயன்படட்டும்!"

'விடுதலைப் போராட்டத்தில் ஒரு படைக்கலனாகவே கலையைப் பயன்படுத்துகிறோம்'

'இளைப்பாறும் சோலையாகவோ, களைப்பாறும் நந்தவனமாகவோ கலை உலகைக் கருதமாட்டோம்'

கவின் கலை மன்றப் பாராட்டு விழாவில் மு. கருணாநிதி கருத்துரை

வண்ணை—தியாகராயர் கவின் கலை மன்றச் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நன்றி தெரிவித்துப் பேசிய மு. கருணாநிதி அவர்களின் கருத்துரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"கலை உலகில் நானும், தலைவர் அண்ணா அவர்களும் ஆற்றி வரும் பணிக்காக — நாங்கள் தேர்தலில் வெற்றி பெற்றதற்காக, இந்தக் கவின் கலை மன்றத்தின் சார்பில் பாராட்டு நடைபெறுவதாகத் தெரிவித்தனர்.

"ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் எல்லாம், ஒரு விடுதலைப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள்; நாட்டின் விடுதலைக்காகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். நாங்கள் கலை உலகிலிருந்து அரசியல் உலகு சென்றவர்கள் அல்ல; மாறாக, அரசியல் உலகிலிருந்து, கலை உலகு புகுந்தவர்கள். 'கலை, மக்களுக்காகப் பயன்பட வேண்டும்' என்ற கருத்துக் கொண்டவர்கள். எனவே, கலையை, நாங்கள் மேற்கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்தில் ஒரு படைக் கலனாகவே கருதிப் பயன்படுத்தி வருபவர்கள்.

"கலையை அந்த அளவிலே தான் நாங்கள் நோக்குகிறோமே தவிர, வேறொன்றும் இல்லை; கலை உலகிலிருந்து நாங்கள் அரசியல் உலகு சென்றவர்களுமல்ல; அல்லது கலை உலகை நாங்கள், ஒரு இளைப்பாறும் சோலையாகவோ களைப்பாறும் நந்தவனமாகவோ கொண்டவர்களும் அல்ல.

"கலை, மக்களுக்காகப் பயன்பட வேண்டும் என்ற நோக்கங் கொண்ட எங்களை, இங்கே, கவின் கலை மன்றத்தார் பாராட்டி, வாழ்த்துக் கூறியிருக்கிறார்கள் அவர்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு, வரும் ஜூலையில் மன்றத்தார் நடத்தும் கலை விழாவில் நாங்கள் பங்குபெற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். அந்தக் கட்டளையை, நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வோம் என்றும் கூறிக் கொள்கிறேன்."

இராஜா ரவிவர்மா 109-வது பிறந்ததின விழாப்

பொதுக்கூட்டம்

30-4-57 மாலை 5-30 மணிக்கு ரவிவர்மா கலைக் கழகச் சார்பில், சென்னை—எழும்பூர் பாந்தியன் ரோடு (மியூசியம் தியேட்டரில்), தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள், தலைமையில் மேற்படி விழாவை யொட்டி ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்; பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'ரவிவர்மாவின் கலை' பற்றி சிறப்புரையாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.